**வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை**
TNPSC -ஒருங்கிணைந்த குடிமைப் பணிகள் தேர்வு-IV
(தொகுதி-IV பணிகள்)

**தேர்வு:** தமிழ்நாடு ஆசிரியர் தேர்வு வாரியம் (Tamil Nadu Teachers Recruitment Board)

**பாடம்** : தமிழ் தகுதி மற்றும் மதிப்பீட்டுத் தேர்வு

**பகுதி** : அலகு I: பிரித்து எழுதுதல் – சேர்த்து எழுதுதல்

## உள்ளடக்கம்


1. புணர்ச்சி ....... 3
1.1 இயல்பு புணர்ச்சி ....... 4
1.2 விகாரப்புணர்ச்சி ....... 4
1.2.1 தோன்றல் விகாரம் ....... 4
1.2.2 திரிதல் விகாரம் ....... 5
1.2.3 கெடுதல் விகாரம் ....... 5
1.3 ஒரே புணர்ச்சியில் பல விகாரங்கள் ....... 5
1.4 உயிர் ஈற்றுப் புணர்ச்சி ....... 6
1.5 மெய்யீற்றுப் புணர்ச்சி ....... 6
1.6 உடம்படுமெய் ....... 7
1.7 திசைப்பெயர்ப் புணர்ச்சி ....... 8
1.8 குற்றியலுகரப் புணர்ச்சி ....... 8
1.9 மெய்ம்மயக்கம் ....... 8
2. ஆறாம் வகுப்பு பழைய புத்தகம் ....... 10
3. ஆறாம் வகுப்பு புதிய புத்தகம் ....... 12

4. ஏழாம் வகுப்பு பழைய புத்தகம் ....... 16

5. ஏழாம் வகுப்பு புதிய புத்தகம் ....... 17

6. எட்டாம் வகுப்பு பழைய புத்தகம் ....... 21

7. எட்டாம் வகுப்பு புதிய புத்தகம் ....... 27

8. ஒன்பதாம் வகுப்பு பழைய புத்தகம் ....... 30

9. ஒன்பதாம் வகுப்பு புதிய புத்தகம் ....... 33

10. பத்தாம் வகுப்பு பழைய புத்தகம் ....... 34

11. பத்தாம் வகுப்பு புதிய புத்தகம் ....... 38

12. 11 மற்றும் 12ஆம் வகுப்பு பழைய புத்தகம் ....... 39

13. 11 மற்றும் 12ஆம் வகுப்பு புதிய புத்தகம் ....... 43

14. மாதிரி வினாக்கள் ....... 45

15. முந்தைய ஆண்டு வினாக்கள் ....... 46

**© Copyright**
The Department of Employment and Training has prepared the Competitive Exams study material in the form of e-content for the benefit of Competitive Exam aspirants and it is being uploaded in this Virtual Learning Portal. This e-content study material is the sole property of the Department of Employment and Training. No one (either an individual or an institution) is allowed to copy or reproduce the matter in any form. The trespassers will be prosecuted under the Indian Copyright Act. It is a cost-free service provided to the job seekers who are preparing for the Competitive Exams.

**Director,**
**Department of Employment and Training.**

## 1. புணர்ச்சி

புணர்ச்சியில் நிலைமொழியின் இறுதி எழுத்தைப் பொறுத்து உயிரீறு, மெய்யீறு எனவும் வருமொழியின் முதல் எழுத்தைப் பொறுத்து உயிர்முதல் மெய்ம்முதல் எனவும் பிரிக்கலாம்.

எழுத்து வகையால் சொற்கள் **நான்கு** வகைப்படும்.

கலை + அழகு **(உயிரீறு)**

மண் + குடம் **(மெய்யீறு)**

வாழை + இலை **(உயிர்முதல்)**

வாழை + மரம் **(மெய்ம்முதல்)**

மேலும் இப்புணர்ச்சியை நிலைமொழி இறுதி எழுத்து, வருமொழி முதல் எழுத்து அடிப்படையில் நான்காகப் பிரிக்கலாம்.

**உயிர்முன் உயிர்** (மணி (ண்+இ) + அடி = மணியடி)

**உயிர்முன் மெய்** (பனி + காற்று = பனிக்காற்று)

**மெய்ம்முன் உயிர்** (ஆல் + இலை = ஆலிலை)

**மெய்ம்முன் மெய்** (மரம் + (க்+இ) கிளை = மரக்கிளை)

நிலைமொழி (முதலில் நிற்கும் சொல்) மற்றும் வருமொழி (அடுத்து வரும் சொல்) இரண்டும் ஒன்றுடன் ஒன்று சேர்வது **புணர்ச்சி** எனப்படும். இது இயல்பு புணர்ச்சி மற்றும் விகாரப் புணர்ச்சி என இரு வகைப்படும்.



### 1.1 இயல்பு புணர்ச்சி

நிலைமொழியும் வருமொழியும் சேரும்போது எவ்வித மாற்றமும் ஏற்படவில்லையென்றால், அஃது இயல்புப்புணர்ச்சியாகும்.

(எ-டு) பொன் + வளையல் = பொன்வளையல்; மலர் + மாலை மலர்மாலை; பனை + மரம் = பனைமரம்; வாழை + மரம் வாழைமரம்.

உடல் + ஓம்பல் = உடலோம்பல் (இங்கு **ல் + ஓ** இணைந்து **லோ** என்னும் **உயிர்மெய்** எழுத்து ஆயிற்று. புதிய எழுத்து எதுவும் தோன்றவோ வேறு எழுத்தாகத் திரியவோ மறையவோ இல்லை.)

### 1.2 விகாரப்புணர்ச்சி

இருசொற்கள் சேரும்போது தோன்றல், திரிதல், கெடுதல் ஆகிய மாற்றங்கள் ஏற்படுமாயின் அவற்றை விகாரப்புணர்ச்சி என்பர். விகாரப் புணர்ச்சியை நன்னூலார் தோன்றல் விகாரம், திரிதல் விகாரம், கெடுதல் விகாரம் என மூன்று வகைப்படுத்திக் காட்டுகிறார். இம்மூவகை விகாரங்களும் நிலைமொழியாகவும், வருமொழியாகவும் வரும் சொற்களின் முதல், இடை, இறுதி ஆகிய மூன்று இடங்களிலும் நிகழும் என்று அவர் கூறுகிறார்.

#### 1.2.1 தோன்றல் விகாரம்

இரு சொற்களுக்கு இடையில் எழுத்தோ, சாரியையோ தோன்றுவதுதோன்றல் விகாரம் எனப்படும்.

**சான்று:**

பூ+கொடி= பூங்கொடி (ங் என்ற எழுத்துத் தோன்றியது)

வாழை + பழம் = வாழைப்பழம் (ப் என்ற எழுத்துத் தோன்றியது)

யானை+கொம்பு= யானைக் கொம்பு (க் என்ற எழுத்துத் தோன்றியது)

ஆ+பால்= ஆவின் பால் (இன் என்ற சாரியை தோன்றியது)

### 1.2.2 திரிதல் விகாரம்

இரு சொற்களில், ஏதேனும் ஒரு சொல்லில் உள்ள எழுத்து இன்னோர் எழுத்தாகத் திரிதல் (மாறுதல்) திரிதல் விகாரம் எனப்படும்.

**சான்று:**

பொன்+குடம் = பொற்குடம் (நிலைமொழி இறுதி ன் என்பது ற் எனத் திரிந்துள்ளது)

முன்+நிலை = முன்னிலை(வருமொழி முதல் ந் என்பது ன் எனத் திரிந்துள்ளது)

சில நேரங்களில் நிலைமொழியின் இறுதி எழுத்தும், வருமொழியின் முதல் எழுத்தும் இன்னோர் எழுத்தாகத் திரிதல் உண்டு.

சான்று: பொன்+தாமரை = பொற்றாமரை (நிலைமொழி இறுதி **ன்** என்பதும், வருமொழி முதல் **த்** என்பதும் **ற்** எனத் திரிந்துள்ளன.)

### 1.2.3 கெடுதல் விகாரம்

இரு சொற்களில் ஏதேனும் ஒரு சொல்லில் உள்ள எழுத்து மறைந்து போதல் **கெடுதல் விகாரம்** எனப்படும். (கெடுதல்-மறைதல்)

மர**ம்** + நிழல் = மரநிழல் (நிலை மொழி இறுதி **ம்** என்பது கெட்டது.)

மேலே கூறப்பட்ட மூன்று விகாரங்களும் நிலைமொழியாகவும், வருமொழியாகவும் அமையும் இரு சொற்களின் முதல், இடை, இறுதி ஆகிய மூன்று இடங்களிலும் நிகழும் என நன்னூலார் குறிப்பிட்டுள்ளார்.

**சான்று :**

ஆறு + பத்து =அறுபது

இதில் நிலைமொழியின் முதலில் உள்ள **ஆ** என்னும் நெட்டெழுத்து**அ** என்னும் குற்றெழுத்தாகத் திரிந்தது. வருமொழியின் இடையில் உள்ள **த்**என்ற மெய் கெட்டது.

### 1.3 ஒரே புணர்ச்சியில் பல விகாரங்கள்

இரு சொற்கள் சேர்ந்துவரும் ஒரு புணர்ச்சியில் **தோன்றல், திரிதல், கெடுதல்** என்னும் மூன்றுவகை விகாரங்களில் ஒரே ஒரு விகாரம் மட்டும்

அல்லாமல் இரண்டு விகாரமோ, மூன்று விகாரமோ கூட வரப்பெறும் என்கிறார் நன்னூலார்.

**ஒரு புணர்க்கு இரண்டும் மூன்றும் உறப்பெறுமே - (நன்னூல், 157)**

மரம் + பெட்டி = மரப்பெட்டி (இதில் நிலைமொழியின் இறுதியில் உள்ள மகரமெய் கெட்டு, அங்கே வருமொழியின் முதலில் உள்ள எழுத்துக்கு ஏற்ப, **பகர மெய் தோன்றியதால் கெடுதல், தோன்றல்** என்னும் இரு விகாரங்கள் வந்தன).

பனை + காய் = பனங்காய் (இதில் நிலைமொழியாக வந்துள்ள பனை என்பதன் இறுதியில் உள்ள ஐகாரம் கெட்டு (**கெடுதல்** விகாரம்), இடையில் அம் என்ற சாரியை தோன்றி (**தோன்றல்** விகாரம்), அம் என்ற சாரியையில் உள்ள மகரமெய் ஙகர மெய்யாகத் திரிந்ததால். (**திரிதல்** விகாரம்) **மூன்று விகாரங்களும்** வந்தன).

## 1.4 உயிர் ஈற்றுப் புணர்ச்சி

நிலைமொழியின் இறுதி எழுத்து உயிர் எழுத்தாக அமைந்து புணர்வது உயிரீற்றுப் புணர்ச்சி எனப்படும். இது உயிர்முன் உயிர், உயிர்முன் மெய் என இருவகையாக அமையும்.

**(எ.கா.)** சிலை + அழகு (உயிர்முன் உயிர்)

வாழை + காய் (உயிர்முன் மெய்)

## 1.5 மெய்யீற்றுப் புணர்ச்சி

நிலைமொழியின் இறுதி எழுத்து மெய்எழுத்தாக அமைந்து புணர்வது மெய்யீற்றுப் புணர்ச்சி எனப்படும். இது மெய்முன் உயிர், மெய்முன் மெய் என இருவகையாக அமையும்.

**(எ.கா.)** மண் + அடுப்பு (மெய்முன் உயிர்)

கடல் + கரை (மெய்முன் மெய்)

## 1.6 உடம்படுமெய்

உயிரை ஈறாக உடைய சொற்களின்முன் உயிரை முதலாக உடைய சொற்கள் வந்து சேரும்; அப்போது சொற்கள் சேராமல் தனித்து நிற்கும்; **ஒன்று சேராத உயிரொலிகளை** ஒன்று சேர்ப்பதற்கு அங்கு ஒரு மெய் தோன்றும். இதனை உடம்படுமெய் என்று சொல்வர்.

நிலைமொழியின் ஈற்றில் **'இ.ஈ.ஐ'** என்னும் உயிரெழுத்துகளை ஈறாக உடைய சொற்கள் நிற்கும். அவற்றின்முன், பன்னிரண்டு உயிர்களையும் முதலாவதாக உடைய சொற்கள் சேரும். அந்நிலையில் **யகரம்** உடம்படுமெய்யாக வரும்.

மணி + அழகு = மணி + ய் + அழகு = மணியழகு

தீ + எரி = தீ + ய் + எரி = தீயெரி

ஒடை + ஓரம் = ஓடை + ய் + ஓரம் = ஓடையோரம்

'இ, ஈ, ஐ' தவிர, பிற உயிரெழுத்துகள் நிலைமொழி ஈறாக வரும்போது அவற்றின்முன் வருமொழியில் பன்னிரண்டு உயிர்களும் வந்து புணர்கையில் **வகர மெய்** தோன்றும்.

பல + உயிர் = பல + வ் + உயிர் = பலவுயிர்

பா + இனம் = பா + வ் + இனம் = பாவினம்

நிலைமொழி ஈறாக ஏகாரம் வந்து. வருமொழியில் பன்னிரண்டு உயிரெழுத்துகளையும் உடைய சொற்கள் வந்து புணர்கையில் யகரமோ வகரமோ தோன்றும்.

சே + அடி = சே + ய் + அடி = சேயடி:

சே + வ் + அடி = சேவடி

தே + ஆரம் = தே + வ் + ஆரம் = தேவாரம்

இவனே + அவன் = இவனே +ய் + அவன் = இவனேயவன்

## 1.7 திசைப்பெயர்ப் புணர்ச்சி

முதன்மைத் திசைகள் நான்கு. அவை கிழக்கு, மேற்கு, தெற்கு, வடக்கு ஆகியன. திசைப்பெயர்களோடு திசைப்பெயரும், பிறபெயரும் சேருவது திசைப்பெயர்ப் புணர்ச்சி எனப்படும்.

**வடக்கு + கிழக்கு = வடகிழக்கு**

**வடக்கு + மேற்கு = வடமேற்கு**

வடக்கு என்னும் நிலைமொழி கிழக்கு, மேற்கு என்னும் வருமொழிகளோடு சேரும்போது நிலைமொழியின் இறுதி எழுத்துகளான **க், கு** நீங்கிப் புணர்ந்தது.

**தெற்கு + மேற்கு = தென்மேற்கு**

**தெற்கு + கிழக்கு = தென்கிழக்கு**

தெற்கு என்னும் திசைப்பெயரோடு மேற்கு, கிழக்கு என்னும் திசைப்பெயர்கள் சேரும்போது, நிலைமொழியின் இறுதியிலுள்ள கு நீங்கும்; பிறகு **றகரம் னகரமாகத்** திரிந்து புணரும்.

## 1.8 குற்றியலுகரப் புணர்ச்சி

வட்டு + ஆடினான் = வட்(ட்+உ) + ஆடினான் = வட்ட் + ஆடினான் = வட்டாடினான்

நிலைமொழியாக வரும் குற்றியலுகரத்தின் முன் உயிரெழுத்துகள் வந்தால், நிலைமொழியிலுள்ள உகரம் கெடும். வருமொழியிலுள்ள உயிரெழுத்து நின்ற மெய்யுடன் இணையும்.

குற்றியலுகரத்தைப் போலவே சில முற்றியலுகரங்களுக்கும் இவ்விரு விதிகளும் பொருந்தும்.

உறவு + அழகு = உற(வ் +உ) = உறவ் + அழகு = உறவழகு

## 1.9 மெய்ம்மயக்கம்

புணர்ச்சியில் இரு சொற்கள் இணையும்போது வருமொழியில் க, ச, த, ப வந்தால் சில இடங்களில் மீண்டும் அதே எழுத்துத் தோன்றும். இதை' வலி மிகுதல்' என்பர்.

இது போன்றே சில இடங்களில் மெல்லினமும் மிகுதல் உண்டு. குறிப்பாக, ங, ஞ, ந, ம என்ற நான்கு எழுத்துகளும் இவ்வாறு மிகும்.

1. 'ய'கர ஈற்றுச் சொற்கள் முன் மெல்லினம் மிகும்.

எ.கா. மெய்+மயக்கம்=மெய்ம்மயக்கம்

மெய்+ஞானம்=மெய்ஞ்ஞானம்

செய்+நன்றி=செய்ந்நன்றி

2. வேற்றுநிலை மெய்ம்மயக்கத்தில் யரழ முன்னர் மெல்லினம் மிகும்.

எ.கா. வேய்+குழல்=வேய்ங்குழல்

கூர்+சிறை=கூர்ஞ்சிறை

பாழ்+கிணறு=பாழ்ங்கிணறு

3. 'புளி' என்னும் சுவைப் பெயர் முன்னர் வல்லெழுத்து மட்டுமன்றி மெல்லினமும் மிகும்.

எ.கா. புளி+கறி=புளிங்கறி; புளி+சோறு=புளிஞ்சோறு

4. உயிரெழுத்தை இறுதியில் கொண்ட மரப் பெயர்களுக்கு முன்னர் மெல்லினம் மிகும்.

எ.கா. மா+பழம்=மாம்பழம்; விள+காய்=விளங்காய்

5. 'பூ' என்னும் பெயர் முன்னர் வல்லினத்தோடு மெல்லினமும் மிகும்.

எ.கா.

பூ+கொடி=பூங்கொடி

பூ+சோலை=பூஞ்சோலை

பூ+தொட்டி=பூந்தொட்டி

## 2. ஆறாம் வகுப்பு பழைய புத்தகம்

| வார்த்தை | பிரித்து எழுதுதல் |
|---|---|
| **அன்பகத்து இல்லா** | அன்பு + அகத்து + இல்லா |
| **வன்பாற்கண்** | வன்பால் + கண் |
| **தளிர்த்தற்று** | தளிர்த்து + அற்று |
| **தமக்குரியர்** | தமக்கு + உரியர் |
| **அன்பீனும்** | அன்பு + ஈனும் |
| **நிழலருமை** | நிழல் + அருமை |
| **வழுக்கென்ப** | வழுக்கு + என்ப |
| **புறத்துறுப்பு** | புறம் + உறுப்பு |
| **தரமில்லை** | தரம் + இல்லை |
| **பருப்புணவு** | பருப்பு + உணவு |
| **கரும்பெங்கே** | கரும்பு + எங்கே |
| **அவனமுதான்** | அவன் + அமுதான் |
| **அவளெங்கே** | அவள் + எங்கே |
| **திருவருட்பா** | திரு + அருள் + பா |
| **என்பிலதனை** | என்பு + இலதனை |
| **நாய்க்கால்** | நாய் + கால் |
| **நன்கணியர்** | நன்கு + அணியர் |
| **நட்பென்னாம்** | நட்பு + என்னாம் |
| **வேறில்லை** | வேறு + இல்லை |
| **தொழிலனைத்தும்** | தொழில் + அனைத்தும் |

| | |
|---|---|
| இரண்டொழிய | இரண்டு + ஒழிய |
| தமிழழகு | தமிழ் + அழகு |
| மலரடி | மலர் + அடி |
| தேனருவி | தேன் + அருவி |
| மணமுண்டு | மணம் + உண்டு |
| சிலரழுவார் | சிலர் + அழுவார் |
| புகழிழந்தேன் | புகழ் + இழந்தேன் |
| நாற்றிசை | நான்கு + திசை |
| ஆற்றுணா | ஆறு + உணா |
| பலரில் | பலர் + இல் |
| ஓலைச்சுவடி | ஓலை + சுவடி |
| தமிழ்ப்பணி | தமிழ் + பணி |
| குறிஞ்சிப்பாட்டு | குறிஞ்சி + பாட்டு |
| எழுத்தாணி | எழுத்து + ஆணி |
| பத்துப்பாட்டு | பத்து + பாட்டு |
| இனிதீன்றல் | இனிது + ஈன்றல் |
| இரட்டுற மொழிதல் | இரண்டு + உற + மொழிதல் |
| அறிவுடையார் | அறிவு + உடையார் |
| அஃதுடையார் | அஃது + உடையார் |
| நாடில்லை | நாடு + இல்லை |

### 3. ஆறாம் வகுப்பு புதிய புத்தகம்

| வார்த்தை | பிரித்து எழுதுதல் |
|---|---|
| **நிலவென்று** | நிலவு + என்று |
| **தமிழெங்கள்** | தமிழ் + எங்கள் |
| **அமுதென்று** | அமுது + என்று |
| **செம்பயிர்** | செம்மை + பயிர் |
| **செந்தமிழ்** | செம்மை + தமிழ் |
| **பொய்யகற்றும்** | பொய் + அகற்றும் |
| **பாட்டிருக்கும்** | பாட்டு + இருக்கும் |
| **எட்டுத்திசை** | எட்டு + திசை |
| **அஃறிணை** | அல் + திணை |
| **பாகற்காய்** | பாகு + அல் + காய் |
| **இடப்புறம்** | இடது + புறம் |
| **சீரிளமை** | சீர்மை + இளமை |
| **சிலப்பதிகாரம்** | சிலம்பு + அதிகாரம் |
| **கணினித்தமிழ்** | கணினி + தமிழ் |
| **வெண்குடை** | வெண்மை + குடை |
| **பொற்கோட்டு** | பொன் + கோட்டு |
| **கொங்கலர்** | கொங்கு + அலர் |
| **அவனளிபோல்** | அவன் + அளிபோல் |
| **நன்மாடங்கள்** | நன்மை + மாடங்கள் |
| **நிலத்தினியிடையே** | நிலத்தின் + இடையே |

| | |
|---|---|
| முத்துச்சுடர் | முத்து + சுடர் |
| நிலாவொளி | நிலா + ஒளி |
| தட்பவெப்பம் | தட்பம் + வெப்பம் |
| வேதியுரங்கள் | வேதி + உரங்கள் |
| தரையிறங்கும் | தரை + இறங்கும் |
| வழித்தடம் | வழி + தடம் |
| கண்டறி | கண்டு + அறி |
| ஒய்வற | ஒய்வு + அற |
| ஔடதமாம் | ஔடதம் + ஆம் |
| ஏனென்று | ஏன் + என்று |
| ஆழக்கடல் | ஆழம் + கடல் |
| விண்வெளி | விண் + வெளி |
| நீலவான் | நீலம் + வான் |
| இல்லாதியங்கும் | இல்லாது + இயங்கும் |
| நின்றிருந்த | நின்று + இருந்த |
| அவ்வுருவம் | அ + உருவம் |
| மருத்துவத்துறை | மருத்துவம் + துறை |
| செயலிலக்க | செயல் + இழக்க |
| இடமெல்லாம் | இடம் + எல்லாம் |
| மாசற | மாசு + அற |
| குற்றமில்லாதவர் | குற்றம் + இல்லாதவர் |
| சிறப்புடையார் | சிறப்பு + உடையார் |

| | |
|---|---|
| கைப்பொருள் | கை + பொருள் |
| மானமில்லா | மானம் + இல்லா |
| பசியின்றி | பசி + இன்றி |
| படிப்பறிவு | படிப்பு + அறிவு |
| காட்டாறு | காடு + ஆறு |
| அறிவுடைமை | அறிவு + உடைமை |
| இவையெட்டும் | இவை + எட்டும் |
| நன்றியறிதல் | நன்றி + அறிதல் |
| பொறையுடைமை | பொறை + உடைமை |
| தாலாட்டு | தால் + ஆட்டு |
| பாட்டிசைத்து | பாட்டு + இசைத்து |
| கண்ணுறங்கு | கண் + உறங்கு |
| வாழையிலை | வாழை + இலை |
| கையமர்த்தி | கை + அமர்த்தி |
| பொங்கலன்று | பொங்கல் + அன்று |
| போகிப்பண்டிகை | போகி + பண்டிகை |
| பொருளுடைமை | பொருள் + உடைமை |
| உள்ளுவதெல்லாம் | உள்ளுவது + எல்லாம் |
| பயனிலா | பயன் + இலா |
| கல்லெடுத்து | கல் + எடுத்து |
| நானிலம் | நான்கு + நிலம் |
| நாடென்ற | நாடு + என்ற |

| | |
|---|---|
| **கலமேரி** | கலம் + ஏரி |
| **கதிர்ச்சுடர்** | கதிர் + சுடர் |
| **மூச்சடக்கி** | மூச்சு + அடக்கி |
| **பெருவானம்** | பெருமை + வானம் |
| **அடிக்குமலை** | அடிக்கும் + அலை |
| **வணிகச்சாத்து** | வணிகம் + சாத்து |
| **பண்டமாற்று** | பண்டம் + மாற்று |
| **மின்னணு** | மின் + அணு |
| **விரிவடைந்த** | விரிவு + அடைந்த |
| **நூலாடை** | நூல் + ஆடை |
| **எதிரொலிக்க** | எதிர் + ஒலிக்க |
| **தம்முயிர்** | தம் + உயிர் |
| **இன்புற்றிருக்க** | இன்புற்று + இருக்க |
| **தானென்று** | தான் + என்று |
| **எளிதாகும்** | எளிது + ஆகும் |
| **பாலையெல்லாம்** | பாலை + எல்லாம் |
| **இன்னுயிர்** | இனிமை + உயிர் |
| **மலையெலாம்** | மலை + எலாம் |
| **வண்ணப்படங்கள்** | வண்ணம் + படங்கள் |
| **கல்லுண்டு** | கல் + உண்டு |
| **கல்லில்லை** | கல் + இல்லை |

## 4. ஏழாம் வகுப்பு பழைய புத்தகம்

| வார்த்தை | பிரித்து எழுதுதல் |
|---|---|
| **யாதெனின்** | யாது + எனின் |
| **பொய்யாதொழுகின்** | பொய்யாது + ஒழுகின் |
| **புறந்தூய்மை** | புறம் + தூய்மை |
| **தன்நெஞ்சு** | தன் + நெஞ்சு |
| **புகழில்லை** | புகழ் + இல்லை |
| **யாதொன்றும்** | யாது + ஒன்றும் |
| **பயக்குமெனின்** | பயக்கும் + எனின் |
| **மக்கட்கெல்லாம்** | மக்கள் + எல்லாம் |
| **பிணியின்மை** | பிணி + இன்மை |
| **குலனுடைமை** | குலன் + உடைமை |
| **பூங்கோயில்** | பூ + கோயில் |
| **புடைத்தென்னார்** | புடைத்து + என்னார் |
| **என்றுருகுவார்** | என்று + உருகுவார் |
| **அழுக்கிலா** | அழுக்கு + இல்லா |
| **அறிவுண்டாம்** | அறிவு + உண்டாம் |
| **அணிவதாலல்லவோ** | அணிவதால் + அல்லவோ |
| | |
| **உடற்குண்டாம்** | உடற்கு + உண்டாம் |
| **விலையில்லா** | விலை + இல்லா |
| **நேரிங்கே** | நேர் + இங்கே |

| | |
|---|---|
| சேமமுற | சேமம் + உற |
| தேசமெல்லாம் | தேசம் + எல்லாம் |
| பருவப்பெண் | பருவம் + பெண் |
| நெற்கதிர் | நெல் + கதிர் |
| மண்ணுண்டோ | மண் + உண்டோ |
| நிலவுமுண்டோ | நிலவும் + உண்டோ |
| நின்னடி | நின் + அடி |
| மணற்கேணி | மணல் + கேணி |
| கற்றறிந்தார் | கற்று + அறிந்தார் |
| எண்ணென்ப | எண் + என்ப |
| கண்ணுடையார் | கண் + உடையார் |
| என்பணிந்த | என்பு + அணிந்த |

## 5. ஏழாம் வகுப்பு புதிய புத்தகம்

| வார்த்தை | பிரித்து எழுதுதல் |
|---|---|
| குரலாகும் | குரல் + ஆகும் |
| வானொலி | வான் + ஒலி |
| இரண்டல்ல | இரண்டு + அல்ல |
| தந்துதவும் | தந்து + உதவும் |
| ஒப்புமையில்லாத | ஒப்புமை + இல்லாத |
| காடெல்லாம் | காடு + எல்லாம் |
| கிழங்கெடுக்கும் | கிழங்கு + எடுக்கும் |
| பெயரறியா | பெயர் + அறியா |

| | |
|---|---|
| மனமில்லை | மனம் + இல்லை |
| நேற்றிரவு | நேற்று + இரவு |
| நிலவொளி | நிலவு + ஒளி |
| காட்டாறு | காடு + ஆறு |
| அனைத்துண்ணி | அனைத்து + உண்ணி |
| நேரமாகி | நேரம் + ஆகி |
| வேட்டையாடிய | வேட்டை + ஆடிய |
| பொருட்செல்வம் | பொருள் + செல்வம் |
| யாதெனின் | யாது + எனின் |
| தன்னெஞ்சு | தன் + நெஞ்சு |
| தீதுண்டோ | தீது + உண்டோ |
| யாண்டுளனோ | யாண்டு + உளனோ |
| கல்லளை | கல் + அளை |
| பூட்டுங்கதவுகள் | பூட்டும் + கதவுகள் |
| தோரணமேடை | தோரணம் + மேடை |
| வாசலலங்காரம் | வாசல் + அலங்காரம் |
| பெருங்கடல் | பெருமை + கடல் |
| இன்றாகி | இன்று + ஆகி |
| ஏடெடுத்தேன் | ஏடு + எடுத்தேன் |
| துயின்றிருந்தார் | துயின்று + இருந்தார் |
| என்றுரைக்கும் | என்று + உரைக்கும் |
| வாய்த்தீயின் | வாய்த்து + ஈயின் |

| | |
|---|---|
| **கேடில்லை** | கேடு + இல்லை |
| **எவனொருவன்** | எவன் + ஒருவன் |
| **உயர்வடைவோம்** | உயர்வு + அடைவோம் |
| **இவையெல்லாம்** | இவை + எல்லாம் |
| **வனப்பில்லை** | வனப்பு + இல்லை |
| **வார்ப்பெனில்** | வார்ப்பு + எனில் |
| **வண்கீரை** | வண்மை + கீரை |
| **கட்டியடித்தல்** | கட்டி + அடித்தல் |
| **கோட்டோவியம்** | கோடு + ஓவியம் |
| **செப்பேடு** | செப்பு + ஏடு |
| **எழுத்தாணி** | எழுத்து + ஆணி |
| **எழுத்தென்ப** | எழுத்து + என்ப |
| **கரைந்துண்ணும்** | கரைந்து + உண்ணும் |
| **கற்றனைத்தூறும்** | கற்றனைத்து + ஊறும் |
| **நீருலையில்** | நீர் + உலையில் |
| **மாரியொன்று** | மாரி + ஒன்று |
| **தேர்ந்தெடுத்து** | தேர்ந்து + எடுத்து |
| **ஓடையெல்லாம்** | ஓடை + எல்லாம் |
| **தூதோலை** | தூது + ஓலை |
| **ஞானச்சுடர்** | ஞானம் + சுடர் |
| **இன்புருகு** | இன்பு + உருகு |
| **இன்சொல்** | இனிமை + சொல் |

| | |
|---|---|
| **வன்சொல்** | வன்மை + சொல் |
| **பெருங்கை** | பெருமை + கை |
| **நெடுநிலை** | நெடுமை + நிலை |
| **உற்றுறிதல்** | உற்று + அறிதல் |
| **பேரறிவு** | பெருமை + அறிவு |
| **ஈரறிவு** | இரண்டு + அறிவு |
| **மூவறிவு** | மூன்று + அறிவு |
| **ஐந்தறிவு** | ஐந்து + அறிவு |
| **ஆறறிவு** | ஆறு + அறிவு |
| **பகுத்தறிதல்** | பகுத்து + அறிதல் |
| **அரம்போலும்** | அரம் + போலும் |
| **நாடென்ப** | நாடு + என்ப |
| **கண்ணில்லது** | கண் + இல்லது |
| **மலையளவு** | மலை + அளவு |
| **தன்னாடு** | தன் + நாடு |
| **இவையில்லாது** | இவை + இல்லாது |
| **தானொரு** | தான் + ஒரு |
| **எதிரொலித்து** | எதிர் + ஒலித்து |
| **முதுமொழி** | முதுமை + மொழி |
| **கேண்மியா** | கேள் + மியா |
| **சென்மியா** | செல் + மியா |
| **முஃடீது** | முள் + தீது |

| | |
|---|---|
| **கஃடீது** | கல் + தீது |
| **அந்தாதி** | அந்தம் + ஆதி |

## 6. எட்டாம் வகுப்பு பழைய புத்தகம்

| சொல் | பிரித்து எழுதுதல் |
|---|---|
| **பசும்பொற்சுடர்** | பசுமை + பொன் + சுடர் |
| **கண்ணிறைந்த** | கண் + நிறைந்த |
| **என்னுள்ளம்** | என் + உள்ளம் |
| **பேரறிவு** | பெருமை + அறிவு |
| **செயற்கரிய** | செயற்கு + அரிய |
| **நட்பன்று** | நட்பு + அன்று |
| **பொருட்டன்று** | பொருட்டு + அன்று |
| **ஆறுய்த்து** | ஆறு + உய்த்து |
| **செந்தமிழ்** | செம்மை + தமிழ் |
| **பேச்சுக்கலை** | பேச்சு + கலை |
| **புத்துயிரூட்டி** | புதுமை + உயிர் + ஊட்டி |
| **சதுரகராதி** | சதுர் + அகராதி |
| **புகழாரம்** | புகழ் + ஆரம் |
| **நந்தமிழ்** | நம் + தமிழ் |
| **பேரின்பம்** | பெருமை + இன்பம் |
| **நன்னூல்** | நன்மை + நூல் |
| **பிணியின்றி** | பிணி + இன்றி |
| **அவையஞ்சான்** | அவை + அஞ்சான் |
| **மாண்புடையார்** | மாண்பு + உடையார் |
| **மயரிகளல்லராய்** | மயரிகள் + அல்லராய் |
| **மன்னுயிர்** | மன் + உயிர் |

| | |
|---|---|
| **மலர்தலை** | மலர் + தலை |
| **வேண்டியதில்லை** | வேண்டியது + இல்லை |
| **புகழெனக்கு** | புகழ் + எனக்கு |
| **குவையெனக்கு** | குவை + எனக்கு |
| **தமிழ்ப்பசி** | தமிழ் + பசி |
| **செய்தித்தாள்** | செய்தி + தாள் |
| **ஓரிடம்** | ஓர் + இடம் |
| **வானொலி** | வான் + ஒலி |
| **சொற்பிழை** | சொல் + பிழை |
| **தொண்ணூற்றாறு** | தொண்ணூறு + ஆறு |
| **திணையளவு** | திணை + அளவு |
| **பனையளவு** | பனை + அளவு |
| **பசுந்தலை** | பசுமை + தலை |
| **மாசிலா** | மாசு + இலா |
| **ஈரிருவர்** | ஈர் + இருவர் |
| **பைங்குவளை** | பசுமை + குவளை |
| **செந்தாமரை** | செம்மை + தாமரை |
| **கோடிடறி** | கோடு + இடறி |
| **சுயம்வரம்** | சுயம் + வரம் |
| **அருளென்றாள்** | அருள் + என்றாள் |
| **இருபதாண்டு** | இருபது + ஆண்டு |
| **மின்னணுவியல்** | மின் + அணு + இயல் |
| **உள்ளங்கை** | உள் + அம் + கை |
| **உள்நின்று** | உள் + நின்று |
| **மேம்பாடுடைய** | மேம்பாடு + அடைய |
| **உள்ளங்கை** | உள் + அம் + கை |

| | |
|---|---|
| மின்னஞ்சல் | மின் + அஞ்சல் |
| நுண்ணறிவு | நுண் + அறிவு |
| இணையத்தளம் | இணையம் + தளம் |
| சிற்றூர் | சிறுமை + ஊர் |
| பல்கலைக்கழகம் | பல்கலை + கழகம் |
| தொலைத்தொடர்பு | தொலை + தொடர்பு |
| கம்பிச்சுருள் | கம்பி + சுருள் |
| மலர்க்கரம் | மலர் + கரம் |
| குவியுமென்று | குவியும் + என்று |
| வானுறு | வான் + உறு |
| பழந்தான் | பழம் + தான் |
| செங்கதிரவன் | செம்மை + கதிரவன் |
| தாய்மையன்பு | தாய்மை + அன்பு |
| பாரதத்தாய் | பாரதம் + தாய் |
| சேய்மையுற்ற | சேய்மை + உற்ற |
| ஐயாயிரம் | ஐந்து + ஆயிரம் |
| வேடமணிந்து | வேடம் + அணிந்து |
| சிறையிலடைத்த | சிறையில் + அடைத்த |
| தென்னாடு | தெற்கு + நாடு |
| விடுதலையுணர்வு | விடுதலை + உணர்வு |
| அறப்போராட்டம் | அறம் + போராட்டம் |
| தொழிற்பயிற்சி | தொழில் + பயிற்சி |
| மெய்ஞ்ஞானம் | மெய் + ஞானம் |
| உடம்பார் | உடம்பு + ஆர் |
| ஒன்றுற | ஒன்று + உற |
| கோலமிட்டு | கோலம் + இட்டு |

| | |
|---|---|
| **கதையழகு** | கதை + அழகு |
| **ஏட்டிலக்கியம்** | ஏடு + இலக்கியம் |
| **நாடகக்கலை** | நாடகம் + கலை |
| **நூற்றாண்டு** | நூறு + ஆண்டு |
| **தேசியப்பாடல்** | தேசியம் + பாடல் |
| **நாடகம்** | நாடு + அகம் |
| **தமிழ்ப்பண்பு** | தமிழ் + பண்பு |
| **பேராசிரியர்** | பெருமை + ஆசிரியர் |
| **எட்டுத்தொகை** | எட்டு + தொகை |
| **சிறப்பிடம்** | சிறப்பு + இடம் |
| **நிழற்பாவை** | நிழல் + பாவை |
| **நடிப்புக்கலை** | நடிப்பு + கலை |
| **சண்பகக்காடு** | சண்பகம் + காடு |
| **வனந்தொறும்** | வனம் + தொறும் |
| **போதவிழ்** | போது + அவிழ் |
| **உயிரென** | உயிர் + என |
| **அருந்திறல்** | அருமை + திறல் |
| **ஒற்றைக்கால்** | ஒற்றை + கால் |
| **காட்டுயிரிகள்** | காடு + உயிரிகள் |
| **சிற்றாறு** | சிறுமை + ஆறு |
| **புகலிடம்** | புகல் + இடம் |
| **விலங்கினம்** | விலங்கு + இனம் |
| **ஐம்பூதங்கள்** | ஐந்து + பூதங்கள் |
| **வாழிடம்** | வாழ் + இடம் |
| **எளிதென்ப** | எளிது + என்ப |
| **பண்புடைமை** | பண்பு + உடைமை |

| | |
|---|---|
| மக்களொப்பு | மக்கள் + ஒப்பு |
| பயனுடையார் | பயன் + உடையார் |
| பண்புடையார் | பண்பு + உடையார் |
| அன்புடைமை | அன்பு + உடைமை |
| மக்கட்பண்பு | மக்கள் + பண்பு |
| திரிந்தற்று | திரிந்து + அற்று |
| பண்பொத்தல் | பண்பு + ஒத்தல் |
| பண்பிலான் | பண்பு + இலான் |
| கண்டபோதெல்லாம் | கண்டபோது + எல்லாம் |
| பசியறாது | பசி + அறாது |
| வீடுதோறிரந்தும் | வீடுதோறும் + இரந்தும் |
| கண்டுளம் | கண்டு + உளம் |
| நேருற | நேர் + உற |
| நெஞ்சினைத்தவர் | நெஞ்சு + இளைத்தவர் |
| வானியல் | வான் + இயல் |
| தென்திசை | தெற்கு + திசை |
| ஐம்பூதம் | ஐந்து + பூதம் |
| பழந்தமிழர் | பழமை + தமிழர் |
| வானூர்தி | வான் + ஊர்தி |
| காலந்தோறும் | காலம் + தோறும் |
| செஞ்ஞாயிறு | செம்மை + ஞாயிறு |
| மயிற்பொறி | மயில் + பொறி |
| பெரும்பூலம் | பெருமை + புலம் |
| திருவுளம் | திரு + உளம் |
| திருப்புயம் | திரு + புயம் |
| இருநிலம் | இரண்டு + நிலம் |

| | |
|---|---|
| **பெருந்தவம்** | பெருமை + தவம் |
| **மாசற** | மாசு + அற |
| **தன்னினம்** | தன் + இனம் |
| **தலைவனென** | தலைவன் + என |
| **அரும்பணி** | அருமை + பணி |
| **தமிழன்னை** | தமிழ் + அன்னை |
| **தனித்தமிழ்** | தனி + தமிழ் |
| **செந்தமிழ்ச்செல்வி** | செம்மை + தமிழ் + செல்வி |
| **நன்றியுணர்வு** | நன்றி + உணர்வு |
| **உறுதியுரை** | உறுதி + உரை |
| **உணவின்றி** | உணவு + இன்றி |
| **சொற்பொழிவு** | சொல் + பொழிவு |
| **சொல்லாராய்ச்சி** | சொல் + ஆராய்ச்சி |
| **உருவச்சிலை** | உருவம் + சிலை |
| **அமுதகிரணம்** | அமுதம் + கிரணம் |
| **பிள்ளைத்தமிழ்** | பிள்ளை + தமிழ் |
| **நகைச்சுவை** | நகை + சுவை |
| **மண்ணுலகம்** | மண் + உலகம் |
| **உள்ளொடுங்கி** | உள் + ஒடுங்கி |
| **புத்துணர்ச்சி** | புதுமை + உணர்ச்சி |
| **சிற்றிலக்கியம்** | சிறுமை + இலக்கியம் |
| **அங்குமிங்கும்** | அங்கும் + இங்கும் |
| **வாலெங்கே** | வால் + எங்கே |
| **இயற்கையன்னை** | இயற்கை + அன்னை |
| **குரங்கரசர்** | குரங்கு + அரசர் |
| **ஆறுய்த்து** | ஆறு + உய்த்து |

| | |
|---|---|
| **குற்றியலிகரம்** | குறுமை + இயல் + இகரம் |
| **வீடியாது** | வீடு + யாது |
| **என்பதியாது** | என்பது + யாது |
| **வரகியாது** | வரகு + யாது |
| **மன்னுயிர்** | மன் + உயிர் |
| **சொற்பிழை** | சொல் + பிழை |

7. எட்டாம் வகுப்பு புதிய புத்தகம்

| சொல் | பிரித்தெழுதுதல் |
|---|---|
| **என்றென்றும்** | என்று + என்றும் |
| **வானமளந்தது** | வானம் + அளந்தது |
| **அறிந்ததனைத்தும்** | அறிந்தது + அனைத்தும் |
| **வானமறிந்த** | வானம் + அறிந்த |
| **இருதிணை** | இரண்டு + திணை |
| **ஐம்பால்** | ஐந்து + பால் |
| **நன்செய்** | நன்மை + செய் |
| **நீளுழைப்பு** | நீள் + உழைப்பு |
| **சீருக்கேற்ப** | சீருக்கு + ஏற்ப |
| **ஒடையாட** | ஒடை + ஆட |
| **விழுந்ததங்கே** | விழுந்தது + அங்கே |
| **செத்திறந்த** | செத்து + இறந்த |
| **பருத்தியெல்லாம்** | பருத்தி + எல்லாம் |
| **இன்னோசை** | இனிமை + ஓசை |

| | |
|---|---|
| **பாலூறும்** | பால் + ஊறும் |
| **வல்லுருவம்** | வன்மை + உருவம் |
| **நெடுந்தேர்** | நெடுமை + தேர் |
| **இவையுண்டார்** | இவை + உண்டார் |
| **தாமினி** | தாம் + இனி |
| **நலமெல்லாம்** | நலம் + எல்லாம் |
| **இடமெங்கும்** | இடம் + எங்கும் |
| **கலனல்லால்** | கலன் + அல்லால் |
| **கோயிலப்பா** | கோயில் + அப்பா |
| **பகைவனென்றாலும்** | பகைவன் + என்றாலும் |
| **கனகச்சுனை** | கனகம் + சுனை |
| **முழுவதிர** | முழுவு + அதிர |
| **பாடறிந்து** | பாடு + அறிந்து |
| **முறையெனப்படுவது** | முறை + எனப்படுவது |
| **மட்டுமல்ல** | மட்டும் + அல்ல |
| **கயிற்றுக்கட்டில்** | கயிறு + கட்டில் |
| **கண்ணோடாது** | கண் + ஓடாது |
| **கசடற** | கசடு + அற |
| **என்றாய்ந்து** | என்று + ஆய்ந்து |
| **அக்களத்து** | அ + களத்து |
| **கதிரீன** | கதிர் + ஈன |
| **வாசலெல்லாம்** | வாசல் + எல்லாம் |

| | |
|---|---|
| **பெற்றெடுத்தோம்** | பெற்று + எடுத்தோம் |
| **காலிறங்கி** | கால் + இறங்கி |
| **வெங்கரி** | வெம்மை + கரி |
| **என்றிருள்** | என்று + இருள் |
| **போலுடன்றன** | போல் + உடன்றன |
| **சீவனில்லாமல்** | சீவன் + இல்லாமல் |
| **விலங்கொடித்து** | விலங்கு + ஒடித்து |
| **காட்டையெரித்து** | காட்டை + எரித்து |
| **இதந்தரும்** | இதம் + தரும் |
| **நமனில்லை** | நமன் + இல்லை |
| **நம்பர்க்கங்கு** | நம்பர்க்கு + அங்கு |
| **ஆனந்தவெள்ளம்** | ஆனந்தம் + வெள்ளம் |
| **உள்ளிருக்கும்** | உள் + இருக்கும் |
| **பெருஞ்செல்வம்** | பெருமை + செல்வம் |
| **ஊராண்மை** | ஊர் + ஆண்மை |
| **திரிந்தற்று** | திரிந்து + அற்று |
| **பிரிந்துண்ணும்** | பிரிந்து + உண்ணும் |
| **இன்பதுன்பம்** | இன்பம் + துன்பம் |
| **குணங்களெல்லாம்** | குணங்கள் + எல்லாம் |
| **விழித்தெழும்** | விழித்து + எழும் |
| **போவதில்லை** | போவது + இல்லை |
| **படுக்கையாகிறது** | படுக்கை + ஆகிறது |

| | |
|---|---|
| ஐம்பெருங்காப்பியம் | ஐந்து + பெருமை + காப்பியம் |
| மலையளவு | மலை + அளவு |

## 8. ஒன்பதாம் வகுப்பு பழைய புத்தகம்

| வார்த்தை | பிரித்து எழுதுதல் |
|---|---|
| அருஞ்சொல் | அருமை + சொல் |
| செந்நெல் | செம்மை + நெல் |
| கருமையுண்டார் | கருமை + உண்டார் |
| பொன்னூஞ்சல் | பொன் + ஊஞ்சல் |
| தத்திப்பாய்ந்தான் | தத்தி + பாய்ந்தான் |
| வில்லெழுத்து | வில் + எழுத்து |
| புட்டுண்டு | புட்டு + உண்டு |
| மருப்புசி | மருப்பு + ஊசி |
| மார்புப் போவை | மார்பு + போவை |
| எமதென்று | எமது + என்று |
| பொய்யில்லை | பொய் + இல்லை |
| பொன்னீர் | பொன் + நீர் |
| வெந்துயிர்த்து | வெந்து + உயிர்த்து |
| காட்டிடமுனை | காட்டு + இடமுனை |
| கருமுகில் | கருமை + முகில் |
| வெண்மதி | வெண்மை + மதி |
| தாம்பூலப்பை | தாம்பூலம் + பை |
| எழுத்துத்திரி | எழுத்து + திரி |

| | |
|---|---|
| **அறிவுகொண்டாக** | அறிவு + கொண்டாக |
| **நாத்தொலைவில்லை** | நா + தொலைவு + இல்லை |
| **பிணிநோயுற்றோர்** | பிணி + நோய் + உற்றோர் |
| **இயல்பீராறு** | இயல்பு + ஈர் + ஆறு |
| **நன்மொழி** | நன்மை + மொழி |
| **எனக்கிடர்** | எனக்கு + இடர் |
| **தொழுதேத்த** | தொழுது + ஏத்த |
| **உண்டென்று** | உண்டு + என்று |
| **நல்லறம்** | நன்மை + அறம் |
| **ஈண்டியினியான்** | ஈண்டி + இனி + யான் |
| **காண்டுடு** | காண் + தடு |
| **சேவடி** | செம்மை + அடி |
| **வெவ்விரும்பானி** | வெம்மை + இரும்பு + ஆனி |
| **மற்றிரண்டு** | மற்று + இரண்டு |
| **குருகேற்றம்** | குருகு + ஏற்றம் |
| **தன்னரிய** | தன் + அரிய |
| **தவிப்புய்தி** | தவிப்பு + எய்தி |
| **இத்தகைய** | இ + தகைய |
| **மனநலம்** | மனம் + நலம் |
| **இருப்புமுனை** | இரும்பு + முனை |
| **ஈண்டிவரே** | ஈண்டு + இவரே |
| **உரைக்கும்** | எடுத்து + உரைக்கும் |

| | |
|---|---|
| பங்கிட்டார் | பங்கு + இட்டார் |
| எழுத்திட்டார் | எழுத்து + இட்டார் |
| என்றாகாடியமான் | என்று + ஆகாடியம் + ஆன |
| புறநானூறு | புறம் + நான்கு + நூறு |
| ஆரளவு | அருமை + அளவு |
| கருங்கோல் | கருமை + கோல் |
| பெருந்தேன் | பெருமை + தேன் |
| குறுந்தொகை | குறுமை + தொகை |
| ஒருவற்கு | ஒருவன் + கு |
| இழிவு அன்று | இழிவு + அன்று |
| சால்பென்னும் | சால்பு + என்னும் |
| சிலப்பதிகாரம் | சிலம்பு + அதிகாரம் |
| சுருப்புநாண் | சுருப்பு + நாண் |
| செப்புக்குடம் | செம்பு + குடம் |
| தெங்குக்கால் | தெங்கு + கால் |
| எஃகுசிறுமை | எஃகு + சிறுமை |
| **வார்த்தை** | **பிரித்து எழுதுதல்** |
| நாட்டுத்தலை | நாடு + தலை |
| காட்டுக்கோழி | காடு + கோழி |
| ஆற்றுப்பாலம் | ஆறு + பாலம் |
| கிணற்றுத்தவளை | கிணறு + தவளை |
| ஞாயிற்றியாது | ஞாயிறு + யாது |

| | |
|---|---|
| பத்துப்பாட்டம் | பத்து + ஆட்டம் |
| உயர்வடைந்தனர் | உயர்வு + அடைந்தனர் |
| தமிழ்ப்பாடம் | தமிழ் + பாடம் |
| கல்லலை | கல் + அலை |
| மரவேர் | மரம் + வேர் |
| தாமரை | தாம் + உரை |
| விளையாட்டுடையார் | விளையாட்டு + உடையார் |
| அவ்வொளி | அவ்வழி + ஒளி |
| இணையத்தளம் | இணையம் + தளம் |
| திருக்குமரன் | திரு + குமரன் |
| கடற்கரை | கடல் + கரை |
| நாட்டுப்பண் | நாடு + பண் |
| ஆற்றுமணல் | ஆறு + மணல் |
| செப்புப்பட்டயம் | செம்பு + பட்டயம் |

9. ஒன்பதாம் வகுப்பு புதிய புத்தகம்

| வார்த்தை | பிரித்து எழுதுதல் |
|---|---|
| கண்டெடுக்கப்பட்டுள்ளன | கண்டு + எடுக்கப்பட்டு + உள்ளன |
| புறநானூறு | புறம் + நான்கு + நூறு |
| மற்றொன்று | மற்று + ஒன்று |
| அறியமுடிகிறது | அறிய + முடிகிறது |
| தமிழ்பேசு | தமிழ் + பேசு |
| கைகள் | கை + கள் |

| | |
|---|---|
| பூக்கள் | பூ + கள் |
| மாவடி | மா + அடி |
| தனியாள் | தனி + ஆள் |
| தொன்மையானான | தொன்மை + ஆன |
| நூலாகிய | நூல் + ஆகிய |
| சிற்பக்கலை | சிற்பம் + கலை |

## 10. பத்தாம் வகுப்பு பழைய புத்தகம்

| வார்த்தை | பிரித்து எழுதுதல் |
|---|---|
| வழியொழுகி | வழி + ஒழுகி |
| அவ்வூர் | அ + ஊர் |
| பரிந்தோம்பி | பரிந்து + ஓம்பி |
| தெரிந்தோம்பி | தெரிந்து + ஓம்பி |
| கஃறீது | கல் + தீது |
| முஃடீது | முள் + தீது |
| பஃறீது | பல் + தீது |
| ஓரிரவு | ஓர் + இரவு |
| எள்ளறு | எள் + அறு |
| புள்ளுறு | புள் + உறு |
| அரும்பெறல் | அருமை + பெறல் |
| பெரும்பெயர் | பெருமை + பெயர் |
| பெருங்குடி | பெருமை + குடி |
| புகுந்தீங்கு | புகுந்து + ஈங்கு |

| | |
|---|---|
| பெண்ணணங்கு | பெண் + அணங்கு |
| நற்றிறம் | நன்மை + திறம் |
| காற்சிலம்பு | கால் + சிலம்பு |
| செங்கோல் | செம்மை + கோல் |
| வெளியுலகில் | வெளி + உலகில் |
| செந்தமிழ் | செம்மை + தமிழ் |
| ஊரறியும் | ஊர் + அறியும் |
| எவ்விடம் | எ + இடம் |
| நெடுநாவாய் | நெடுமை + நாவாய் |
| அங்கண் | அம் + கண் |
| பற்பல | பல + பல |
| புன்கண் | புன்மை + கண் |
| மென்கண் | மென்மை + கண் |
| அருவிலை | அருமை + விலை |
| நன்கலம் | நன்மை + கலம் |
| செலவொழியா | செலவு + ஒழியா |
| வழிக்கரை | வழி + கரை |
| வந்தணைந்த | வந்து + அணைந்த |
| எம்மருங்கும் | எ + மருங்கும் |
| எங்குறைவீர் | எங்கு + உறைவீர் |
| கண்ணருவி | கண் + அருவி |
| உடம்பெல்லாம் | உடம்பு + எல்லாம் |

| | |
|---|---|
| திருவமுது | திரு + அமுது |
| மனந்தழைப்ப | மனம் + தழைப்ப |
| நற்கறிகள் | நன்மை + கறிகள் |
| இன்னமுது | இனிமை + அமுது |
| வாளரா | வாள் + அரா |
| அங்கை | அகம் + கை |
| நான்மறை | நான்கு + மறை |
| விதிர்ப்புற்றஞ்சி | விதிர்ப்பு + உற்று + அஞ்சி |
| பாவிசை | பா + இசை |
| நாற்கரணம் | நான்கு + கரணம் |
| கரணத்தேர் | கரணத்து + ஏர் |
| நாற்பொருள் | நான்கு + பொருள் |
| செவியறுத்து | செவி + அறுத்து |
| இளங்கனி | இளமை + கனி |
| விண்ணப்பமுண்டு | விண்ணப்பம் + உண்டு |
| பிணியறியோம் | பிணி + அறியோம் |
| நாமென்றும் | நாம் + என்றும் |
| எந்நாளும் | எ + நாளும் |
| தெண்டிரை | தெண்மை + திரை |
| பாசிலை | பசுமை + இலை |
| பைங்கூழ் | பசுமை + கூழ் |
| சேதாம்பல் | செம்மை + ஆம்பல் |

| | |
|---|---|
| அறனறிந்து | அறன் + அறிந்து |
| திறனறிந்து | திறன் + அறிந்து |
| கலநெல் | கலம் + நெல் |
| பூஞ்சோலை | பூ + சோலை |
| பதினெண் | பதின் + எண் |
| கயிற்றுக்கட்டில் | கயிறு + கட்டில் |
| முத்தொள்ளாயிரம் | மூன்று + தொள்ளாயிரம் |
| பாடாண்திணை | பாடு + ஆண் + திணை |
| முந்நீர் | மூன்று + நீர் |
| நாமென்றும் | நாம் + என்றும் |
| தேவாரம் | தேவ + ஆரம் ; தே + ஆரம் |
| பெருக்கெடுத்து | பெருக்கு + எடுத்து |
| உள்ளுறை | உள் + உறை |
| நெடுநீர் | நெடுமை + நீர் |
| அவ்வழி | அ + வழி |
| இருவழி | இரண்டு + வழி |
| வெள்ளியிறு | வெண்மை + எயிறு |
| கரிக்கோடு | கரி + கோடு |
| பெருங்கிரி | பெருமை + கிரி |
| எண்கினங்கள் | எண்கு + இனங்கள் |
| வீழ்ந்துடல் | வீழ்ந்து + உடல் |
| மாதிரத்துறை | மாதிரத்து + உறை |

| | |
|---|---|
| செங்கதிர் | செம்மை + கதிர் |
| பெருவரி | பெருமை + வரி |
| பெருஞ்சிரம் | பெருமை + சிரம் |
| தண்டளிர்ப்பதம் | தண்மை + தளிர் + பதம் |
| திண்டிறல் | திண்மை + திறல் |
| சிரமுகம் | சிரம் + முகம் |
| பணிந்திவர் | பணிந்து + இவர் |
| அன்பெனப்படுவது | அன்பு + எனப்படுவது |
| பண்பெனப்படுவது | பண்பு + எனப்படுவது |
| பற்றில்லேன் | பற்று + இல்லேன் |
| கலம்பகம் | கலம் + பகம் |
| போன்றுருந்தேன் | போன்று + இருந்தேன் |
| கண்ணிரண்டு | கண் + இரண்டு |
| ஓரிரவு | ஓர் + இரவு |
| தன்குறிப்பேற்ற அணி | தன் + குறிப்பு + ஏற்றம் + அணி |
| பெரியன் | பெருமை + அன் |

## 11. பத்தாம் வகுப்பு புதிய புத்தகம்

| சொல் | பிரித்து எழுதுதல் |
|---|---|
| எந்தமிழ்நா | எம் + தமிழ் + நா |
| அருந்துணை | அருமை + துணை |
| ஆரத்தி | ஆல் + அத்தி |
| பாடாண்திணை | பாடு + ஆண் + திணை |

| | |
|---|---|
| **கல்வியென்ற** | கல்வி + என்ற |

## 12. 11 மற்றும் 12ஆம் வகுப்பு பழைய புத்தகம்

| சொல் | பிரித்து எழுதுதல் |
|---|---|
| **பொருளனைத்தும்** | பொருள் + அனைத்தும் |
| **எம்முயிர்** | எம் + உயிர் |
| **வலியறியார்** | வலி + அறியார் |
| **தீயெரிந்தது** | தீ + எரிந்தது |
| **நின்றவொன்றே** | நின்ற + ஒன்றே |
| **சேவழகு** | சே + அழகு |
| **கருத்ததனுள்** | கருத்து + அதனுள் |
| **கொக்கியாது** | கொக்கு + யாது |
| **கதவடைப்பு** | கதவு + அடைப்பு |
| **செலவயர்ந்திசின்** | செலவு + அயர்ந்திசின் |
| **கோட்டுகிர்** | கோடு + உகிர் |
| **வயிற்றுவலி** | வயிறு + வலி |
| **கானப்பறவை** | கானம் + பறவை |
| **வடமேற்கு** | வடக்கு + மேற்கு |
| **மேல்நாடு** | மேற்கு + நாடு |
| **நற்பயன்** | நன்மை + பயன் |
| **தொல்கவின்** | தொன்மை + கவின் |
| **பூங்கொடி** | பூ + கொடி |

| | |
|---|---|
| மட்கலம் | மண் + கலம் |
| பொற்குடம் | பொன் + குடம் |
| மரவேர் | மரம் + வேர் |
| கழற்கால் | கழல் + கால் |
| பொன்றீது | பொன் + தீது |
| கற்றீது | கல் + தீது |
| கண்ணீர் | கண் + நீர் |
| மண்டீது | மண் + தீது |
| முட்டீது | முள் + தீது |
| பற்பல | பல + பல |
| சிலச்சில | சில + சில |
| சில்வலை | சில + வலை |
| ஆரிருள் | அருமை + இருள் |
| செறிவறிந்து | செறிவு + அறிந்து |
| பேரறிவாளன் | பெருமை + அறிவாளன் |
| ஐந்தடக்கம் | ஐந்து + அடக்கம் |
| தாளாற்றி | தாள் + ஆற்றி |
| பொருளெல்லாம் | பொருள் + எல்லாம் |
| நுனிக்கொம்பர் | நுனி + கொம்பர் |
| அச்சிறும் | அ + சிறும் |
| ஆகாறு | ஆகு + ஆறு |
| கொக்கொக்க | கொக்கு + ஒக்க |

| | |
|---|---|
| தீச்சொல் | தீமை + சொல் |
| சிலைத்தொழில் | சிலை + தொழில் |
| தேனினம் | தேன் + இனம் |
| பசும்பொன் | பசுமை + பொன் |
| பூந்தொடை | பூ + தொடை |
| அருமறை | அருமை + மறை |
| உனக்கியாது | உனக்கு + யாது |
| புகழுடம்பு | புகழ் + உடம்பு |
| முந்நூல் | மூன்று + நூல் |
| முன்னாள் | முந்தைய + நாள் |
| முந்நாள் | மூன்று + நாள் |
| செங்கீரை | செம்மை + கீரை |
| சித்தரெல்லாம் | சித்தர் + எல்லாம் |
| அருந்தவம் | அருமை + தவம் |
| ஈனமுள்ள | ஈனம் + உள்ள |
| பெருந்தமிழ் | பெருமை + தமிழ் |
| செங்கதிர் | செம்மை + கதிர் |
| குறையின்றி | குறை + இன்றி |
| நீரூற்று | நீர் + ஊற்று |
| மனப்பறவை | மனம் + பறவை |
| பெருங்குணம் | பெருமை + குணம் |
| உலகனைத்தும் | உலகு + அனைத்தும் |

| | |
|---|---|
| தினந்தினம் | தினம் + தினம் |
| நானென்று | நான் + என்று |
| கருத்தோடிசைத்து | கருத்தோடு + இசைத்து |
| களிற்றியானை | களிறு + யானை |
| நாட்டுப்பற்று | நாடு + பற்று |
| ஆற்றுக்கரை | ஆறு + கரை |
| பச்சூன் | பசுமை + ஊன் |
| பைந்நிணம் | பசுமை + நிணம் |
| வெஞ்சினம் | வெம்மை + சினம் |
| பெருங்களிறு | பெருமை + களிறு |
| கடுந்திறல் | கடுமை + திறல் |
| தமிழன்னை | தமிழ் + அன்னை |
| முள்ளிலை | முள் + இலை |
| மரவிலை | மரம் + இலை |
| பகலுறை | பகல் + உறை |
| முதுமரம் | முதுமை + மரம் |
| வண்டினம் | வண்டு + இனம் |
| அருந்துயர் | அருமை + துயர் |
| குருகுமுண்டு | குருகு + உண்டு |
| யாருமில்லை | யாரும் + இல்லை |
| மாசற்றார் | மாசு + அற்றார் |
| நிறையுடைமை | நிறை + உடைமை |

| | |
|---|---|
| **அறனல்ல** | அறன் + அல்ல |
| **அறிவில்லார்** | அறிவு + இல்லார் |
| **விருந்தொரால்** | விருந்து + ஒரால் |
| **பெருந்தேர்** | பெருமை + தேர் |
| **நன்றன்று** | நன்று + அன்று |
| **ஆரமிர்து** | அருமை + அமிர்து |

### 13. 11 மற்றும் 12ஆம் வகுப்பு புதிய புத்தகம்

| சொல் | பிரித்து எழுதுதல் |
|---|---|
| **அணிந்துரை** | அணிந்து + உரை |
| **பொதுச்சிறப்பு** | பொது + சிறப்பு |
| **செங்கயல்** | செம்மை + கயல் |
| **திருப்புகழ்** | திரு + புகழ் |
| **உயர்ந்தோங்கும்** | உயர்ந்து + ஒங்கும் |
| **தண்டுடை** | தண்டு + உடை |
| **இயைவதாயினும்** | இயைவது + ஆயினும் |
| **புகழெனின்** | புகழ் + எனின் |
| **இனிதென** | இனிது + என |
| **சிறுகோல்** | சிறுமை + கோல் |
| **பொற்சிலம்பு** | பொன் + சிலம்பு |
| **இழுக்கின்றி** | இழுக்கு + இன்றி |
| **முறையறிந்து** | முறை + அறிந்து |
| **அரும்பொருள்** | அருமை + பொருள் |

| | |
|---|---|
| மனையென | மனை + என |
| பயமில்லை | பயம் + இல்லை |
| கற்பொடி | கல் + பொடி |
| உலகனைத்தும் | உலகு + அனைத்தும் |
| திருவடி | திரு + அடி |
| நீரோடை | நீர் + ஓடை |
| சிற்றூர் | சிறுமை + ஊர் |
| கற்பிளந்து | கல் + பிளந்து |
| மணிக்குலம் | மணி + குலம் |
| புவியாட்சி | புவி + ஆட்சி |
| மண்ணுடை | மண் + உடை |
| புறந்தருதல் | புறம் + தருதல் |
| காலத்தச்சன் | காலம் + தச்சன் |
| உழுதுழுது | உழுது + உழுது |
| பேரழகு | பெருமை + அழகு |
| ஒற்றியெடுத்த | ஒற்றி + எடுத்த |
| காற்றிலேறி | காற்றில் + ஏறி |
| பல்லாண்டு | பல + ஆண்டு |
| உரமெல்லாம் | உரம் + எல்லாம் |
| சுவரெல்லாம் | சுவர் + எல்லாம் |
| கண்ணகிக்குச்சிலை | கண்ணகிக்கு + சிலை |
| செம்பரிதி | செம்மை + பரிதி |

| | |
|---|---|
| **வானமெல்லாம்** | வானம் + எல்லாம் |
| **உன்னையல்லால்** | உன்னை + அல்லால் |
| **செந்தமிழே** | செம்மை + தமிழே |
| **ஆங்கவற்றுள்** | ஆங்கு + அவற்றுள் |
| **தனியாழி** | தனி + ஆழி |
| **வெங்கதிர்** | வெம்மை + கதிர் |
| **இனநிரை** | இனம் + நிரை |
| **புதுப்பெயல்** | புதுமை + பெயல் |
| **அருங்கானம்** | அருமை + கானம் |
| **எத்திசை** | எ + திசை |
| **உள்ளொன்று** | உள் + ஒன்று |
| **ஒருமையுடன்** | ஒருமை + உடன் |
| **பூம்பாவாய்** | பூ + பாவாய் |
| **பெருங்கடல்** | பெருமை + கடல் |
| **தலைக்கோல்** | தலை + கோல் |
| **முன்னுடை** | முன் + உடை |
| **ஏழையென** | ஏழை + என |
| **நன்மொழி** | நன்மை + மொழி |
| **உரனுடை** | உரன் + உடை |

## 14. மாதிரி வினாக்கள்

| வ.எண் | கேள்வி (பிரித்தெழுதுக) | சரியான விடை |
|---|---|---|
| 1 | அன்பகத்து இல்லா | அன்பு + அகத்து + இல்லா |

| | | |
|---|---|---|
| 2 | **சீரிளமை** | சீர்மை + இளமை |
| 3 | **திருவருட்பா** | திரு + அருள் + பா |
| 4 | **பாகற்காய்** | பாகு + அல் + காய் |
| 5 | **பனங்காய்** | பனை + காய் |
| 6 | **நிலத்தினியிடையே** | நிலத்தின் + இடையே |
| 7 | **இரண்டொழிய** | இரண்டு + ஒழிய |
| 8 | **பொற்றாமரை** | பொன் + தாமரை |
| 9 | **அடிக்குடிலை** | அடிக்கும் + அலை |
| 10 | **இன்னுயிர்** | இனிமை + உயிர் |

## 15. முந்தைய ஆண்டு வினாக்கள்

**1. "அருந்துணை" என்பதைப் பிரித்தால் (TNPSC/HSGS/2024)**

A) அரு + துணை

B) அரு + இணை

C) அருமை + துணை

D) அருமை + இணை

**விடை:** C

**விளக்கம்:** *'ஈறு போதல்'* என்னும் பண்புப்பெயர் புணர்ச்சி விதியின்படி நிலைமொழி ஈற்றிலுள்ள 'மை' விகுதி கெட்டு (அருமை + துணை → அரு + துணை), வருமொழி முதலெழுத்தான தகரத்திற்கு (த்) இனமான நகர மெய் (ந்த்) *'இனமிகல்'* என்னும் விதியின்படி தோன்றி **'அருந்துணை'** என்று புணர்ந்தது.

**2. எந்தமிழ்நா - பிரித்து எழுதுக. (TNPSC/VSGS/2023)**

A) எந் + தமிழ் + நா

B) எந்த + தமிழ் + நா

C) எம் + தமிழ் + நா

D) எந்தம் + தமிழ் + நா

**விடை:** C

**விளக்கம்:**

- எம் + தமிழ் + நா → நிலைமொழி ஈற்று மகரம் கெட்டு, வருமொழி தகரத்திற்கு இனமான நகர மெய் (ந்த்) தோன்றி **'எந்தமிழ்நா'** என்றானது. (நா என்பது தேசத்தைக் குறிக்கும் பெயர்ச்சொல்).

**3. பலவுயிர் - பிரித்தெழுதுக (TNPSC/CAGS/2022)**

A) பல் + உயிர்

B) பல + உயிர்

C) பல + வுயிர்

D) பல் + வுயிர்

**விடை:** B

**விளக்கம்:**

- **விதி:** *'இ ஈ ஐ வழி யவ்வும் ஏனை உயிர் வழி வவ்வும்'* - நிலைமொழி ஈற்றில் 'அ' கரம் (பல → ல் + அ) இருப்பதால் வருமொழி முதலெழுத்தான உகரத்தோடு சேர வகர உடம்படுமெய் தோன்றும் (பல + வ் + உயிர்). பின்னர் *'உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே'* என்ற விதிப்படி வ் + உ = வு என இணைந்து **'பலவுயிர்'** என்றானது.

**4. பிரித்தெழுதுக: பாடாண்திணை (TNPSC/VCGS/2022)**

A) பாடாண் + திணை

B) பாடு + ஆண் + திணை

C) பாட்டு + ஆண் + திணை

D) பாடா + ஆண் + திணை

**விடை:** B

**விளக்கம்:**

- **விதி:** பாடு + ஆண் + திணை → நிலைமொழி குற்றியலுகரத்தின் முன் உயிர் வர உகரம் கெடும் (*'உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும்'*). பாட் + ஆண் = பாடாண் என்றாகி, வருமொழி வல்லினத்திற்கு இனமான மெல்லினம் மிக்கு **'பாடாண்திணை'** என்றானது. (பாடுதற்குத் தகுதியுடைய ஆண்மகனின் ஒழுலாறு).

**5. 'பூட்டுங்கதவுகள்' என்னும் சொல்லைப் பிரித்தெழுதக் கிடைப்பது. (TNPSC/EOIGS/2024)**

A) பூட்டு + கதவுகள்

B) பூட்டும் + கதவுகள்

C) பூட்டின் + கதவுகள்

D) பூட்டிய + கதவுகள்

**விடை:** B

**விளக்கம்:**

- **விதி:** பூட்டும் + கதவுகள் → நிலைமொழி ஈற்று மகர மெய் கெட்டு (*'மவ்வீறு ஒற்றொழிந்து'*), வருமொழி ககரத்திற்கு (க்) இனமான ஞகர மெய் (ங்) தோன்றி (*'இனமிகல்'*) **'பூட்டுங்கதவுகள்'** என்று புணர்ந்தது.

**6. 'தோரண மேடை' என்னும் சொல்லைப் பிரித்தெழுதக் கிடைப்பது (TNPSC/CTNGS/2024)**

A) தோரணம் + மேடை

B) தோரண + மேடை

C) தோரணம் + ஒடை

D) தோரணம் + ஒடை

**விடை:** A

**விளக்கம்:**

- **விதி:** *'மவ்வீறு ஒற்றொழிந்து உயிரீறு ஒப்பவும்'* என்னும் விதியின்படி, நிலைமொழி இறுதியிலுள்ள மகர மெய் (ம்) கெட்டு (தோரணம் + மேடை → தோரண + மேடை), பின் இயல்பாகப் புணர்ந்து **'தோரண மேடை'** என்றானது.

**7. 'நீரலையில்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது. (TNPSC/ATOGS/2023)**

A) நீரு + உலையில்

B) நீர் + இலையில்

C) நீர் + அலையில்

D) நீரு + இலையில்

**விடை:** C

**விளக்கம்:**

- **விதி:** *'உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே'* என்னும் விதிப்படி, நிலைமொழி ஈற்று மெய்யெழுத்தான ரகரத்தோடு (ர்), வருமொழி முதலெழுத்தான அகரம் (அ) இணைந்து (ர் + அ = ர) **'நீரலையில்'** என்று புணர்ந்தது.

**8. 'இரண்டல்ல' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது (TNPSC/RAMGS/2023)**

A) இரண்டு + டல்ல

B) இரண் + அல்ல

C) இரண்டு + இல்ல

D) இரண்டு + அல்ல

**விடை:** D

**விளக்கம்:**

- **விதி:** *'உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும்'* என்னும் விதிப்படி, நிலைமொழி ஈற்று குற்றியலுகரம் (டு → ட் + உ) உகரத்தை விட்டு ஓடும் (இரண்ட் + அல்ல). பின் *'உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே'* என்ற விதிப்படி ட் + அ = ட என இணைந்து **'இரண்டல்ல'** என்றானது.

**9. 'தேர்ந்தெடுத்து' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது (TNPSC/JADLGS/23)**

A) தேர் + எடுத்து

B) தேர்ந்து + தெடுத்து

C) தேர்ந்தது + அடுத்து

D) தேர்ந்து + எடுத்து

**விடை:** D

**விளக்கம்:**

- **விதி:** தேர்ந்து + எடுத்து → நிலைமொழி ஈற்றிலுள்ள குற்றியலுகரத்தின் முன் வருமொழி உயிர் வர உகரம் கெட்டு (தேர்ந்த் + எடுத்து), பின் தகர மெய்யும் எகரமும் இணைந்து (த் + எ = தெ) **'தேர்ந்தெடுத்து'** என்றானது.

**10. கலம்பகம் - இச்சொல்லைப் பிரித்து எழுதுக. (TNPSC/CCS4T-2022)**

A) கலம் + அகம் B) கலம் + பகம்

C) கலம்பு + அகம் D) கல் + அம்பகம்

**விடை:** B

**விளக்கம்:**

- **விதி:** கலம் + பகம் → நிலைமொழியும் வருமொழியும் எவ்வித மாற்றமும் இன்றி இயல்பாக இணைந்து **'கலம்பகம்'** என்று புணர்ந்தது. (கலம் = 12, பகம் = 6; பதினெட்டு உறுப்புகளைக் கொண்ட சிற்றிலக்கிய வகை).